


காஞ்சிபுரம் ஒன்றியம், மேல்ஒட்டிவாக்கம் ஊராட்சி, கூத்திரமேடு கிராமத்தில் அமைச்சர்கள் ஆர்.காந்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு கீழ் ரூ.53.50 இலட் இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கபடி உள்விளையாட்டு அரங்கத்தை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் திருமதி.நித்தியா சுகுமார் ஆகியோர் உள்ளனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# பல்லாவரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி - மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ராஜீவ்காந்தி - பா.ஸ்ரீலேகா சிறப்புரை! எல்.பிரபு தலைமை!

காஞ்சிபுரம், ஜூன்.23-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தி.மு.கழக மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (23.06.2025 - திங்கட்கிழமை) மாலை 5:30 மணியளவில் கண்டோண்மெண்ட் பல்லாவரம் ரங்கநாத மதலி தெருவில் நலதிட்டங்கள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

கழக மாணவர் அணி செயலாளர் ராஜீவ்காந்தி, தலைமை கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் நலதிட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு தலைமையில் கண்டோண்மெண்ட் நகர செயலாளர் டி.பாபு, பம்மல் தெற்கு பகுதி செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலக்குழ தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன், விக்கி (எ) விக்னேஸ்வரன், வே.சங்கீதா, எஸ்.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மாணவர் அணி செயலாளர் ராஜீவ்காந்தி, தலைமை கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அமைச்சர் தா.மோ. அன்பரசன் நலதிட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் க.செல்வம் எம்.பி., மீ.அ.வைத்திய லிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., மாவட்ட அவை தலைவர் தா.துரைசாமி, துணைச் செயலாளர் தூ.மூர்த்தி, மாவட்ட பொரு ளாளர் வெ.விஸ்வநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர்கள் படப்பை மனோகரன், திருமதி. செம்பருத்தி துர்கேஷ், மேயர் திருமதி. வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மற்றும்

தலைமை செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர ,பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நகராட்சி ஊராட்சி ,ஒன்றியக்குழு ,பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், கழக அணிகளின் மாநில மற்றும் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், கண்டோண்மமேண்ட் நகர மற்றும் பம்மல் தெற்கு பகுதி நிர்வாகிகள் ஒன்றிய பகுதி நகர பேரூர் மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இறுதியாக கண்டோண்மெண்ட் நகர மாணவரணி அமைப்பாளர் எம். பி.மகேஷ், பல்லாவரம் நகர மாணவர் அணி அமைப்பாளர் ஜெ.பிரசன்னா, பம்மல் நகர மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.வெங்கடேஷ் ஆகியோர் நன்றியுரை கூறுகின்றனர்.

### திருப்பத்தூருக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### திருப்பத்தூர் மேற்கு – தெற்கு ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பத்தூர், ஜூன். 23-

திருப்பத்தூர் மேற்கு (ம) தெற்கு ஒன்றிய செயல்வீரர் கூட்டம் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளரும், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான A. நல்லதம்பி MLA அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.இராஜேந்திரன் அவர்கள் வரபேற்பளித்தார். ஒன்றிய கழக நிர்வாகிகள் சி.சின்னதம்பி, சி.கழகரசு, சி.கே.சின்னதம்பி, அ.விஜயா, எல்.சிவலிங்கம், எஸ்.சரவணன், வெ.செல்வம் ஆகியோல் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாளர் திரு.கதேவராஜி, தொகுதி பொறுப்பாளர். வேலூர் ஜி. ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் சு.அரசு, டி.ரகுநாத், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், நகர கழக செயலாளர்.சு. இராசேந்திரன்,அ.சம்பத்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்பித்தனர். மற்றும் ஒன்றியக்குழு தலைவர் விஜியாஅருணாசலம், டி.ஆர்.ஞானசேகரன், சத்தியவாணிவில்வலம், வி. அன்பழகன், பி.ஆர். சின்னபையன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ்.பி.அண்ணாதுரை, அ.ஆதித்யா,இ. வெங்கடேஷ், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக துணை அணிகளின் அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட தலைநகரில்முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையினை அமைத்து திறந்து வைக்க ஏற்பாடு செய்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி பாராட்டுகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகைதரும் கழகத்தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும் திருப்பத்தூர் மேற்கு (ம) தெற்கு ஒன்றியங்களிலிருந்து பத்தாயிரத்திற்கும் குறையாமல் கழக தோழர்கள் வருகை தருவது என தீர்மானிக்கப்பட்டது. ஓரணியில் தமிழ்நாடு என்ற கழகத் தலைவர் ஆணைப்படி, கழகத்தினையும் இளையத்தலைவரின் கருத்தினையும் வலுப்படுத்தும் நோக்கில் தீர்மானிக்கப் பட்டது. அனைத்து ஊராட்சிகளிலும் விழுக்காடு புதிய உறுப்பினர்கள ய சேர்க்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமையில்

# திருமுடிவாக்கம் ஊராட்சியில் பாக வாரியாக ஆய்வுக் கூட்டம்!

### சரஸ்வதி மனோகரன் - திருமுடிவாக்கம் இ.மணி முன்னிலை!

காஞ்சிபுரம், ஜூன் 23

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் மத்திய ஒன்றியம், திருமுடிவாக்கம் ஊராட்சி தி.மு.க. பாகங்கள் வாரியாக ஆய்வு கூட்டம் 21.06.2025 - சனிக்கிழமையன்று மாலை 4 மணி, பள்ளிக்கூடத் தெரு, திருமுடிவாக்கம் குரு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை மனோகரன் வழிகாட்டுதலின்படி 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி

பாகம் எண் 227, பாகம் எண் 228, பாகம் எண் 229 ஆகிய பாகங்களின் ஆய்வு கூட்டம் திருபெருமந்தூர் தொகுதி பொறுப்பாளர், கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமையிலும் குன்றத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர், திருமுடிவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமுடிவாக்கம் இமணி, லட்சாவதி கருணாகரன், பி.வைத்தியலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கிளைக் கழகச் செயலாளர்கள் டி.எல்.கணபதி, ஆர்.குணசேகரன், எம். ரகுபதி, மற்றும் மு.குமார், நா.விவேக் உள்ளிட்ட பாகத்திற்குரிய வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA2, பாக தேர்தல் பணிக்குழுவினர்கள், 31 நபர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் தெருமுனை கூட்டம் பெருமாள்பட்டு பகுதியில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ஆர் ஜெயசீலன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் முன்னிலையில் ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் டி.சதீஷ் மு.சக்திவேல் த.உதயநிதி, டிடி.தியாகு, சுந்தர், ஏ.பி.எஸ்.பாலாஜி, கே.ஏ.அபினாஷ், கு.சுதாகர் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது. இதில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி , தலைமை கழக பேச்சாளர் பவானி கண்ணன் கா. ராஜராஜேஸ்வரி திமுக அரசின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்தார்கள். உடன் த.எத்திராஜ், எஸ். பரமேஸ்வரன், ஆர். செந்தாமரை, ஜிசிசி கருணாநிதி, அக்னி மா.செ. ராஜேஷ், தெ. பிரியா குமார், கே கே. சொக்கலிங்கம், கே.தரணி, எஸ். சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே. சீனிவாசன், டி. டி. தயாளன் , எஸ்.புகழேந்தி, வி.தியாகராஜன், கௌரி கஜேந்திரன், உள்பட கழக நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய இளைஞர் அணி சார்பில்

# ஆலத்தூர் - குரூர் கிராமத்தில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!

### வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – எசனை ஆறுமுகம் – சிந்துமதி ராஜா பங்கேற்பு!

பெரம்பலூர், ஜீன்,23

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், குரூர் கிராமத்தில், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பி.ரோகிலன் தலைமையில், ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் முன்னிலை யில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை கழக பேச்சாளர் எசனை ஆறுமுகம், கழக இளம் பேச்சாளர் சிந்துமதி ராஜா ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், ஆர். அருண், டிஆர்.சிவசங்கர், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதிகள் சந்திர மோகன், பாஞ்சாலை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

# கொளத்தூர் கிழக்கு - வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பில் 5000 பேருக்கு உணவு!

### அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

### திருமதி. யோகப்பிரியா எம்.சி - சி.மகேஷ் குமார் - கூ.பீ.ஜெயின் எம்.சி. தலைமை!

சென்னை, ஜூன்.23-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி மற்றும் வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம்மொழி நாள்" விழாவை முன்னிட்டு 5000 நபர்களுக்கு அசைவ உணவு விருந்தினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கி சிறப்பித்தார்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் கிழக்கு மேற்கு மற்றும் வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 16" உண்ண வைத்து மகிழ்வோம்! உடன் பிறப்பாய் நெகிழ்வோம்!! எனும் தலைப்பில் 5000 நபர்களுக்கு அசைவ விருந்து வழங்கும் விழா நேற்று (22.06.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று நண்பகல்: 11.00 மணி, கொளத்தூர் கிழக்கு பகுதி 66வது வார்டில் மாமன்ற உறுப்பினர் யோகப் பிரியா தனசேகர் தலைமையிலும், நண்பகல் 11.45 மணி, கொளத்தூர் மேற்கு பகுதி 69 வது வார்டில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி.மகேஷ் குமார் தலைமையிலும், நண்பகல் 12.30 மணிக்கு வில்லிவாக்கம் மேற்கு பகுதி 94வது வார்டில் மண்டல குழு தலைவர், பகுதி கழகச் செயலாளர், கூ.பீ. ஜெயின் தலைமையிலும் அசைவ விருந்து உணவு வழங்கப் பட்டது.

இம்மூன்று இடங்களிலும் வழங்கப்படும் அசைவ உணவு விருந்து வழங்கும் விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு, பகுதி கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன் எம்.சி, வே.வாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம்மூன்று இடங்களிலும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அசைவ உணவு விருந்தினை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.சந்துரு, இரா. விடுதலை. ஓ.ஏ.நாகலிங்கம், சரிதா மகேஷ் குமார், தேவஜவகர் வானவில் விஜய்,

எஸ். பன்னீர்செல்வம், டிவி செம்மொழி சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன், எஸ்.தனசேகர் துரைக் கண்ணன், ஆர் எஸ் சித்திக், ம.அசோக்குமார், எம். தாவுத்பீ. எம்.சி, அமுதா பொன்னிவளவன் எம்,.சி, ஸ்ரீதணி எம்.சி, கொளத்தூர் கிழக்குமேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி. ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி. டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ். முருகன், எம்.டி.தமிழ்ச் செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி. வில்லிவாக்கம் மேற்குகிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ். பாபு, எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே. பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, மற்றும் கழக நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# கழக மீனவர் அணி சார்பில் மாநில அளவிலான கூடைப்பந்தாட்டப் போட்டி!

### கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

சென்னை, ஜூன்.23-

கழக மாநில மீனவரணி சார்பில் நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் பூந்தோட்ட பள்ளி வளாகத்தில் 7 நாட்கள் நடைபெற்ற மாநில அளவிலான கூடைப் பந் தாட்ட போட்டி 12.06.2025 அன்று துவங்கி 17.06.2025 நிறைவு பெற்றது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்து 26 ஆண்கள் அணி, 14 பொண்கள் அணி என மொத்தம் 40 அணிகள் பங்கேற்றனர். பல்வேறு சுற்றுகளாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் 17.06.2025 மாலை இறுதி போட்டியில் மோதின.

இறுதி போட்டியை மாநில மீனவரணி துணைத் தலைவவரும், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் துவக்கி வைத்து, போட்டியை கண்டுகளித்து இறுதி போட்டியில் ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்று ஜே.பி.ஆர் அணிக்கும், இரண்டாம் இடம் பிடித்த ஸ்ரீ சாய் கூடை பந்தாட்ட கழகம் அணிக்கும், மூன்றாம் அணி ஜெ.என்.பி.சி அணிக்கும், நான்காம் இடம் பிடித்த இந்துஸ்தான் அணிக்கும் கோப்பையும் முதல் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

பெண்கள் பிரிவில் முதல் இடம் பிடித்த ரைசிங் ஸ்டார் அணிக்கும், இரண்டாம் இடம் பிடித்த கோல்டன் ஈகிள் அணிக்கும், மூன்றாம் இடம் பிடித்த அரைஸ் கூடைபந்தாட்ட அணிக்கும், நான்காம் இடம் பிடித்த எழும்பூர் புல்ஸ் அணிக்கும் கோப்பையும் பரிசும் வழங்கினார்.

மேலும் போட்டியில் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கு ஊக்க தொகையும் வழங்கினார்.

தொடர்ந்து பேசிய அவர் திராவிட மாடல் அரசும், தமிழ்நாடு விளையாட்டு துறையும், விளையாட்டு வீரர்களுக்கு அளித்து வரும் ஆதரவை எடுத்துரைத்து விளையாட்டு வீரர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய திராவிட மாடல் அரசும், சட்டமன்ற உறுப்பினரான நானும் தொடர்ந்து உதவ தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்குப் பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசை தம்பி, 14 வது (ஆ) வட்ட செயலாளர் ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன் ஜே.பி.சந்தானகிருஷ்ணன்,

கழகப் பேச்சாளர் வாசு. கருணாநிதி, வடகிழக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே. தேசிங்கு, துணை அமைப்பாளர்கள் எஸ்.செல்வம், டி.மகேந்திரன், ஆர்.குமரன், எம்.எல்.வேலன், எம். ரமேஷ், எஸ்.கே.இளங்கோ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம். கே.எஸ்.கார்த்திக் தமிழ் நாடு பூப்பந்தாட்ட கழக தலைவர் எழிலரசன், கே.எஸ்.ஆனந்தன் ஜெ.கருணாநிதி, எஸ்.விஜயராகவன், பிரேம், அருண், நந்தகுமார், தயாநிதி, எல்லப்பன், சி.சூர்யா, கமல் மற்றும் நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக பங்கேற்றனர்.

### தலைமை சி.எஸ்.இரவி ! முன்னிலை அ.முருகன்! பெரம்பூர் வடக்குப் பகுதி

# 37 'அ' வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### ஆர்.டி.சேகர் எம்.எல்..ஏ – கன்னிகை கோ.ஸ்டாலின் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 23 -

பெரம்பூர் வடக்கு 37 அ வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து வட்டச் செயலாளர் சி.எஸ்.இரவி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்கு பகுதி, 37அ வட்ட தி.மு.க. பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (23-06-2025) J.K.R கல்யாண மண்டபம், M.K.B நகர், மாலை 5.00 மணியளவில் எனது (வட்ட செயலாளர் சி.எஸ்.இரவி தலைமையில்) நடைபெறுகிறது.

இதில் பகுதி செயலாளர் அ.முருகன் முன்னிலை வகித்துப் பேசுகிறார். இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ. ஸ்டாலின் பாகம் வாரியாக உறுப்பினர்களின் பெயர் மற்றும் கைபேசி எண்களை கேட்டு உறுதி செய்கிறார். மாநில மாவட்ட நிர்வாகிகள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர் மாவட்ட துணை அமைப்பாளர் மற்றும் பாக முகவர்கள், வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் சி.எஸ்.இரவி கேட்டுக் கொண்டுள்ளார்.



கழக மாநில மீனவரணி சார்பில் நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் பூந்தோட்ட பள்ளி வளாகத்தில் 7 நாட்கள் நடைபெற்ற மாநில அளவிலான கூடைப்பந்தாட்ட போட்டி 12.06.2025 அன்று துவங்கி 17.06.2025 நிறைவு பெற்றது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்து 26 ஆண்கள் அணி, 14 பொண்கள் அணி என மொத்தம் 40 அணிகள் பங்கேற்றன. பல்வேறு சுற்றுகளாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் 17.06.2025 மாலை இறுதிப் போட்டியில் மோதின. இறுதிப் போட்டியை மாநில மீனவரணி துணைத் தலைவரும், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்ற அணிகளுக்கும் பெண்கள் பிரிவில் வெற்றி பெற்ற அணிகளுக்கும் கோப்பையும் பரிசும் வழங்கினார். மேலும் போட்டியில் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கினார்.